1973 மார்ச் 5]

திரு. ஜே. ஜேம்ஸ் : மத்திய அரசாங்கம் இரயில்வே தொழிலாளர்களுக்குக்கூட போனஸ் வழங்குவதற்கான சட்டங்களை வகுப்பதற்கு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாநில அரசாங்கத்தின்கீழ் வேலை செய்யக்கூடிய ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போதுள்ள சட்டப்படி முடியாது. சந்தர்ப்பம் ஏற்படும்போது மாண்புமிகு உறுப்பினரின் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. எஸ். வடிவேல் : எத்தனை தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள், எவ்வளவு போனஸ் பணம் இதுவரை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கப்படும்.

சலூன் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்.

* 239 **வினா.—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டிலுள்ள சலூன் தொழிலாளர்க்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.

THIRU R. PONNAPPA NADAR : It is not in good taste.

MR. DEPUTY SPEAKER : I expunge all the words.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இப்பொழுது ஷேவிங் கிரீமுக்கு அதிக வரி போட்டிருப்பதால்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

சலூன் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளிகளெல்லாம் தங்களுக்கு இப்பொழுது கிடைக்கின்ற பணம் போதாது என்றும், எனவே கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்றும் கோரி எல்லா சங்கங்களில் இருப்பவர்களும் அமைச்சரைச் சந்திக்கவேண்டும் என்று இருக்கிறார்கள். மத்திய அரசு செய்திருக்கிற அந்த அநீதியைக் கொஞ்சம் மனத்திலே கொண்டு அந்தக் கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கேள்வி, சலூன் தொழிலாளர்கள் பிரச்சினையைப் பற்றியது. நண்பர் சலவைத் தொழிலாளர் பற்றிச் சொல்கிறார். குறுக்கீடு இந்த அரசுக்கு அதில் ஏதும் ஆட்சேபணை இல்லை. சந்தர்ப்பம் வரும்போது யோசிக்கப்படும்.

திரு. த. சோனையா : சலூன்களில் வேலை செய்யும் தொழிலாளி களுக்கு அம்மாதிரி இல்லாதுபோனாலுங்கூட, இனிமேலாவது தமிழகத்தின் முதல்வர் கலைஞர் டாக்டர் அவர்கள் பிறந்த தினத் திலே—முதலாண்டு பிச்சைக்காரர் மறு வாழ்வு, இரண்டாவது ஆண்டு கண் அற்றோர்க்குக் கண் ஒளி வழங்குதல், என்ற முறை யில், இந்த மூன்றாவது ஆண்டில் சலவைத் தொழிலாளர், சலூன் தொழிலாளர், கைவண்டித் தொழிலாளர் ஆகியோர்களுடைய வாழ்வு நலம் பெற அதை எடுத்துக்கொள்வதற்குத் தொழிலாளர் நல அமைச்சரவர்கள் ஒத்துழைப்பு தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கெனவே நமது முதல்வர் அவர்கள், இந்தக் கொள்கை குறித்து நடந்த விவாதத்தின்போது அவர் வெளியிட்ட கருத்துக்களை இந்த நேரத்தில் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதாவது கிராமப் புறங்களில் சிறிய ஓட்டல்கள், இடம் பெயர்கின்ற திரைப் படக் கொட்டகைகள், சிறு அச்சகங்கள், முடி திருத்தகங்கள் முதலியவற்றில் வேலை செய்கிறவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் வரையறுக்கப்படுவது விரும்பத்தக்கதா என்ற ஐயப்பாட்டைத் தெரிவித்தார். இந்தத் தொழிலில் உள்ளவர் களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வரையறுக்கப்படுவதால் இடர்ப்பாடு ஏற்படலாம், உரிமையாளர்கள் தங்கள் கடைகளை